00152

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - 2023/2024

மட்டம் - 04

**LLU4708–அரசியலமைப்புச்சட்டம் II**

இறுதிப் பரீட்சை

காலம் : மூன்று (03) மணித்தியாலம்

திகதி : 03.05.2025 நேரம்: பி.ப 01.30 - பி.ப 04.30

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

மொத்த வினாக்களின் எண்ணிக்கை – 08

பகுதி I மற்றும் பகுதி II என்பனவற்றிலிருந்து குறைந்த பட்சம் இரண்டு (02) வினாக்களையேனும் தெரிவு செய்து ஐந்து (05) வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்குக.

ஒவ்வொரு வினாவும் 20 புள்ளிகளைக் கொண்டுள்ளது.

## பகுதி I

1. "ஒரு வேட்பாளரில் இருந்து மற்றுமொரு வேட்பாளருக்கு இடையிலான, வாக்களிக்கும் உரிமை மூலமான பிரஜைகளின் அமைதியும் இரகசியமுமான தெரிவு ஆனது, பேசுவதற்கும் கருத்து தெரிவிப்பதற்குமான சுதந்திரம் ஆகும்"

Fennando J in *Thavaneethan v. Dayananda Dissnayake, Commissioner of Elections and others* [2003] 1 Sri. L.R 99

அரசியலமைப்பின் உறுப்புரை 14 (1) (அ) இற்கு ஒரு பரந்த பொருட்கோடலை செய்வதன் மூலம் ஒரு உறுதியான போக்கை இலங்கையில் நீதித்துறை காட்டியுள்ளது. இக்கூற்றுடன் நீர் இணங்குகிறீரா? அரசியலமைப்பின் உறுப்புரை 14 (1) (அ) இன் பொருளை பொருட்கோடல் செய்வதில் உயர்நீதிமன்றத்தின் அணுகுமுறைகளை மேற்கூறிய கூற்று எந்தளவில் பிரதிபலிக்கிறது என பொருத்தமான நியதிச்சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச்சட்டங்கள் என்பவற்றை எடுத்துக்காட்டி ஆராய்க.

(20 புள்ளிகள்)

2. கீழே தரப்பட்ட வழக்குத் தீர்ப்புக்களில் ஏதேனும் **இரண்டின் (02)** மீது வழக்குக் குறிப்புகள் எழுதுக.
   I. *Environmental Foundation Limited v Urban Development Authority of SriLanka and others.* [2009] 1 Sri.L.R.123
   II. *Rienzie Perera and Another v. University Grants Commission and Another* (1978-79-80)1 Sri.L.R.128
   III. *Channa Pieris and others v. Attorney General and others* (Ratawesi Peramuna case) [1994] 1 Sri. LR1
   IV. *Amaratunga v Sirimal and Others* (Jana Ghosha Case) [1993] 1 Sri L R 264

**(10x2 = 20** புள்ளிகள்)

3. இலங்கையின் சட்ட மற்றும் அரசியலமைப்பு ஏற்பாடுகள் என்பனவற்றை ஒத்த "சியாரா" எனும் பெயர் கொண்ட ஒரு நாட்டில் பின்வரும் நிகழ்வு இடம்பெற்றது.

நதி என்பவள் பேச்சுக்களை (Podcaster) வழங்கும் ஒரு பிரபல சமூக வலைத்தள செயற்பாட்டாளர் ஆவார். அவளுடைய யூரியுப் வலைத்தளம் (YouTube Chennel) ஆனது சமகால சமூக மற்றும் அரசியல் விடயங்கள் மீது விமர்சிப்புக்களை கொண்டுள்ள அதிகம் பார்வையிடப்பட்ட ஒரு வலைத்தளம் ஆகும். அண்மையில் அவருடைய பேச்சு ஒன்றில் அவர் மதம் சார்ந்த பகிரங்க நிறுவனங்களில் கட்டாயமான ஆடையின் பாவனையை செயற்படுத்தும் அரசாங்கத்தின் திட்டம் ஒன்றை விமர்சித்து இருந்தாள். அவளுடைய பேச்சில் அவள் தெரிவித்ததானது :

"மதம் ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு ஆடை அணியுமாறு அரசாங்கம் மக்களை பலவந்தப்படுத்தல் ஆகாது. நாம் உண்மையாக நோக்கின் சில மதத்தலைவர்கள் கூட தாம் எடுத்துரைக்கும் விழுமியங்களை பின்பற்றுவதில்லை..."

இந்தப் பேச்சு அதிகம் பார்வையிடப்பட்டதுடன் அவளுடைய விமர்சனம் தம்முடைய மத நம்பிக்கையை அவமதிப்பிற்கு உட்படுத்தியதாக கூறிய பல மத நிறுவனங்களின் எதிர்ப்பையும் பெற்றார். சில நாட்களின் பின்னர் நதி அவருடைய வீட்டில் பொலிசாரால் கைது செய்யப்பட்டாள். அவள் சட்டத்தரணி அல்லது அவளது குடும்பம் ஆகியோரை அணுக மறுத்து, மூன்று நாட்கள் தடுத்து வைக்கப்பட்டாள். அவள் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது சட்ட பிரதிநிதித்துவமின்றி தொடர்ச்சியாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன், முறையான உணவு வழங்க மறுக்கப்பட்டதுடன், அவளது தனிப்பட்ட நம்பிக்கைகள் பெண் பொலிசாரால் கீழ்த்தரமான நடாத்துகைக்கும் உட்படுத்தப்பட்டது. மூன்று நாட்களின் பின்னர் அவள் "மதக்குழுக்களின் இடையே சமாதானக் குலைவை ஏற்படுத்தல்" தொடர்பான சட்டங்களின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு நீதவான் நீதிபதியின் முன்னர் சமர்ப்பிக்கப்பட்டார்.

பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் தனது அடிப்படை உரிமைகளின் மீறல் மற்றும் பொலிசாரின் நடத்தை என்பவற்றின் மீது அடிப்படை உரிமைகளுக்கான வழக்கு ஒன்றை முன்வைக்க நதி விரும்புகிறாள்.

நதியின் சட்டத்தரணி நீர் எனக் கருதி அவள் நாடக்கூடிய சாத்தியமுள்ள வாதங்களின் மீது ஒரு குறிப்பை தயாரிக்குக. குறிப்பை தயாரிக்கும் போது எதிர்வாதி முன்வைக்கக்கூடிய சாத்தியமுள்ள எதிர் வாதங்கள் குறித்தும் நீர் ஆராயவேண்டும். பொருத்தமான அரசியலமைப்பு உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச்சட்டங்கள் என்பனவற்றைக் குறிப்பிடுக.

**(20 புள்ளிகள்)**

4. இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழுவிற்கான சட்ட ஆராய்வாளர் ஒருவராக நீர் நியமிக்கப்பட்டுள்ளதாக கருதுக. உமது முதல் செயற்றிட்டமானது இலங்கையின் மனித உரிமைகளுக்கான ஏற்பாடுகளின் கீழ் சமத்துவத்திற்கான உரிமைகளின் பிரயோகம் தொடர்பில் ஒரு விரிவான ஆராய்வு அறிக்கையை தயாரிப்பதாகும்.

நீர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சட்டஉறுப்புரைகளையும் தீர்ப்புச்சட்டங்களையும் பயன்படுத்துமாறு தேவைப்படுத்தப்படுகிறீர்.

**(20 புள்ளிகள்)**

## பகுதி II

5. இலங்கையின் அதிகாரப் பகிர்வின் ஏற்பாடுகளை விருத்தி செய்யும் அரசாங்க ஆணைக்குழுவின் ஒரு ஆராய்வு குழுவின் உறுப்பினர் நீர் எனக் கருதுக. *In re the thirteenth Amendment to the Constitution and the provincial Council Bill* (1987) 2 Sri. L.R 312 இன் மீது வழக்கு ஆராய்வை தயாரிக்குமாறு வேண்டப்பட்டுள்ளீர். பெரும்பான்மையான மற்றும் சிறுபான்மையான தீர்ப்புகள் இரண்டையும் ஆராய்வதற்கு இது தேவைப்படுத்துகிறது. மேலும் அதிகாரப்பகிர்வு எனும் கருத்தேற்பிற்கான ஒரு பரந்த அணுகுமுறையுடன் மாகாணசபைகளின் பரப்பு மீதான உயர்நீதிமன்றத்தின் பொருட்கோடல் இணங்குகிறதா என்பதன் மீது உமது கருத்தை ஆணைக்குழுவானது நாடுகிறது.

**(20 புள்ளிகள்)**

6. கீழே தரப்பட்ட தலைப்புக்களில் ஏதேனும் **இரண்டு (02) என்பவற்றின் மீது குறிப்புகள் எழுதுக.**
   I. அதிகாரப்பகிர்வின் அம்சங்கள்
   II. அரசியலமைப்பாக்கமும் பெரும்பான்மைவாதமும்
   III. ஒற்றையாட்சி அரசாங்கமும் கூட்டாட்சி அரசாங்கமும்
   IV. கூட்டாட்சிக்கும் அதிகாரப்பகிர்விற்கும் இடையிலான ஒப்பீடு

**(10x2= 20 புள்ளிகள்)**

7. 1978ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்த போதும், தமது அதிகாரங்களை பயன்படுத்துவதில் மாகாண சபைகளுக்கு அரசியலமைப்பு சார் இடையீடுகள் தடையாக அமைந்தன. இதன் விளைவாக மாகாண சபைகள் முறைமை ஆனது இலங்கையின் செயற்திறனற்ற முறைமை ஒன்று ஆனது. எனவே இலங்கையின் மாகாணசபைகள் முறைமையின் பலம் மற்றும் பலவீனம் குறித்து மதிப்பிடுவதற்கு உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது. பின்வருவனவற்றை கருத்திற் கொண்டு "இலங்கையில் மாகாணசபைகளின் செயற்திறன்" என்பதன் மீது அறிக்கை ஒன்றை எழுதுமாறு அமைச்சு உம்மைக் கோருகிறது.

   அ) மாகாணசபையின் சட்டவாக்க அதிகாரம்
   ஆ) மாகாணசபையின் நிறைவேற்று அதிகாரம்
   இ) மாகாணசபையின் நீதியியல் அதிகாரம்

உமது விடையை பொருத்தமான நியதிச்சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச்சட்டங்கள் என்பனவற்றால் ஆதாரப்படுத்துக.

**(20 புள்ளிகள்)**

8. "அரசியலைப்பு ஆனது சட்டவாக்கம் மற்றும் பிற அரசாங்க கிளைகளின் பகுதிகளால் ஆன சகல எதேச்சை அதிகார நடவடிக்கைகளுக்கும் எதிராக மக்களை பாதுகாப்பதற்காக தோற்றுவிக்கப்பட்டது ஆகும்"

Friedrich Hayek', The Constitution of liberty, P.178

இக்கூற்றுடன் நீர் இணங்குகிறீரா? அரசியலமைப்பாக்கம் எனும் கோட்பாட்டின் மீது மேலுள்ள கூற்றை ஆராய்க. உமது விடையை ஆதாரப்படுத்த பொருத்தமான சட்ட எடுத்துக்காட்டுக்களை குறிப்பிடுமாறு நீர் தேவைப்படுத்தப்பட்டுள்ளீர்.

**(20 புள்ளிகள்)**

- முழுப்பதிப்புரிமை பெற்றது -